A

முதல் இடைப்பருவப் பொதுத் தேர்வு - 2023

பதினொன்றாம் வகுப்பு

பொருளியல்

பதிவு எண்:

நேரம்: 1:30 மணி

மதிப்பெண்கள்: 50

பகுதி - அ

I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக: 10×1=10

1. மனிதனுடைய வாழ்க்கையின் அன்றாட நடவடிக்கைகளை பற்றி பொருளியல் ஆராய்கிறது என்று கூறியவர்
   அ) ஆடம் ஸ்மித் ஆ) இலயனல் ராபின்ஸ்
   இ) ஆல்பிரட் மார்ஷல் ஈ) சாமுவேல்சன்
2. பொருளாதாரத்தின் தந்தை யார்?
   அ) மாக்ஸ் முல்லர் ஆ) ஆடம்ஸ்மித் இ) கார்ல் மார்க்ஸ் ஈ) பால் சாமுவேல்சன்
3. தகுவிலை ரூ. 250 ஆகவும் மற்றும் உண்மை விலை ரூ. 200 ஆகவும் உள்ளது. நுகர்வோர் எச்சத்தைக் காண்க.
   அ) 375 ஆ) 175 இ) 200 ஈ) 50
4. நுகர்வோர் சமநிலையில் இருக்கும்போது இறுதிநிலை பயன்பாடானது ..... இருக்கும்.
   அ) குறைவாக ஆ) அதிகபட்சமாக இ) சமமாக ஈ) கூடுதலாக
5. சராசரி உற்பத்தி (AP) யைக் கணக்கிடப் பயன்படும் விகிதம்
   அ) ΔTP/N ஆ) ΔTP/ΔN இ) TP/MP ஈ) TP/N
6. ஓர் அலகு உற்பத்திக் காரணியை அதிகரிக்கும்போது கிடைக்கும் உற்பத்தி
   அ) இறுதிநிலை உற்பத்தி ஆ) மொத்த உற்பத்தி
   இ) சராசரி உற்பத்தி ஈ) ஆண்டு உற்பத்தி
7. வெளியுறு செலவுகள் (ம) உள்ளுறு செலவுகளின் கூடுதல் ..... ஆகும்.
   அ) சமூக ஆ) பொருளாதார இ) பண ஈ) மாறா
8. பொருட்களின் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் ..... வருவாயாகும்.
   அ) இலாபம் ஆ) மொத்த இ) சராசரி ஈ) இறுதிநிலை
9. நிறுவனத்தின் சமநிலை என்பது
   அ) MC = MR ஆ) MC > MR இ) MC < MR ஈ) MR = Price
10. விலையின் மற்றொரு பெயர் .....
    அ) சராசரி வருவாய் ஆ) இறுதிநிலை வருவாய்
    இ) மொத்த வருவாய் ஈ) சராசரி செலவு

பகுதி - ஆ

II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி. வினா எண் 17க்கு கட்டாயம் விடையளிக்கவும். 5×2=10

11. பொருளியல் என்றால் என்ன?
12. பண்டங்களை பணிகளிலிருந்து வேறுபடுத்துக.
13. விருப்பங்களை வகைப்படுத்து.

14. உழைப்பு - வரையறு.
15. செலவை வரையறு.
16. மூழ்கும் செலவுகள் என்றால் என்ன?
17. கீழ்க்கண்ட நிறுவனத்தின் தேவைகோடு வரைக.
    அ) நிறைவு போட்டி
    ஆ) முற்றுரிமை

பகுதி - இ

III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி. வினா எண் 24க்கு கட்டாயம் விடையளிக்கவும். 5×3=15

18. நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளியலுக்கு இடையேயான வேறுபாடுகள் யாவை?
19. நுகர்வோர் எச்சத்திற்கு மார்ஷலின் இலக்கணத்தைத் தருக.
20. சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள் யாவை?
21. நிலத்தின் சிறப்பியல்புகள் யாவை?
22. தொழில் முனைவோரின் பணிகள் யாவை?
23. வாய்ப்புச் செலவை எடுத்துக்காட்டுடன் வரையறு.
24. விற்பனை செலவு என்றால் என்ன? உதாரணத்துடன் விளக்குக.

பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 3×5=15

25. a) பொருளியலைப் பற்றிய பல்வேறு இலக்கணங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக.

(அல்லது)

b) பொருளியலின் தன்மை மற்றும் எல்லையை விவரி.

26. a) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதியை வரைபடத்துடன் விவரி.

(அல்லது)

b) விகித அளவு விளைவு விதியை உதாரணத்துடன் விளக்குக.

27. a) பல்வேறுபட்ட விலை நிலைகளில் AR மற்றும் MR கோடுகளுக்கிடையேயான தொடர்பை விளக்குக.

(அல்லது)

b) நிறைவு போட்டியின் இயல்புகள் விளக்குக.
